JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 222/2025 | Crime No. | 50/2024 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-1- செல்வி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of February 2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் பிரிவு குவிமுச 317 மனு அளிக்கப்பட்டு, நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் குறிச்சி பெரியாண்டம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு. பவானி அரசு மருத்துவமனையில் துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறேன்/ தேதி மாதம் நினைவில்லை. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலையில் நான் வீட்டிற்கு செல்வதற்காக சித்தார் பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போது அங்கு ஷேர் ஆட்டோ நின்று கொண்டிருந்தது. அதில் நான் ஏறினேன். ஆட்டோவின் பின் இருக்கையில் ஒரு பெரியவர் அமர்ந்து வந்தா. அவருக்கு பக்கத்தில் நான் அமர்ந்து கொண்டேன். முன்னிருக்கையில் ஒரு பெண்மணி அமர்ந்து வந். ஆட்டோ மேற்கு திசையில் சிறிது தூரம் சென்று ஒரு வளைவில் திரும்பும்பொழுது நிலை தடுமாறி குப்புற விழுந்து விட்டது. ஆட்டோவில் இருந்த ஒரு பெரியவர் கீழே விழுந்து விட்டார். அவருக்கு மேல் நான் விழுந்து விட்டேன் . அந்தப் பெரியவருக்கு தலையில் அடிபட்டு அங்கேயே அவர் சுயநினைவை இழந்துவிட்டார். எனக்கும் அடிபட்டு மூக்கில் இ ரத்தம் வந்தது. நானும் நினைவு இழந்து விட்டேன். பிறகு அங்கிருந்தவர்கள் அடிபட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் நான் மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அன்றைய தினம் ஆட்டோவை ஓட்டிச் சென்ற நபரை எனக்கு அடையாளம் தெரியும். அவர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.04 06:20:58 +0530

விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆட்டோவின் பின் இருக்கையில் தான் அமர்ந்திருந்தேன் என்றால், சரிதான். நான் ஆட்டோவில் ஓட்டுநருக்கு பின்பக்கம் அமர்ந்திருந்ததால் முன்பக்கம் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். ஆட்டோவில் முன்பக்க இருக்கையில் ஒருவர் அமர்ந்திருந்தார் என்பதை போலீஸ் விசாரணையின்போது நான் கூறவில்லை என்றால், சரியல்ல. விபத்தின்போது ஆட்டோ ஓட்டுநருக்கும் அடிபட்டது என்றால், நான் அதை பார்க்கவில்லை, நான் முதல் விசாரணையில் சொல்வது போ, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றது என்றாலும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த கார் ஒன்று திடீரென கிழக்கு பக்கம் திருப்பி கார் மோதியதில் இந்த விபத்தை ஏற்பட்டது என்றாலும், சரியல்ல. ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால், சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர் மெதுவாகத்தான் சென்று கொண்டிருந்தார் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.04 06:21:06 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani